தமிழ்நாடு அரசு

# ஆறாம் வகுப்பு

# தமிழ்

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

6th Std Tamil CBSE FM.indd 1 17-12-2021 15:24:21

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2018*
திருத்திய பதிப்பு - *2019, 2020, 2021, 2022*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

**விலை : ரூ**

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in




6th Std Tamil CBSE FM.indd 2 17-12-2021 15:24:22

## முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.



6th Std Tamil CBSE FM.indd 3 17-12-2021 15:24:22

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!






6th Std Tamil CBSE FM.indd 4 17-12-2021 15:24:23

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



6th Std Tamil CBSE FM.indd 5 17-12-2021 15:24:23



# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

ஒவ்வோர் இயலையும்
ஆர்வத்துடன் அணுக
உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக .....

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம்....

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் ...

ஆளுமை மிக்க
**ஆசிரியர்களுக்கும்**
ஆற்றல் நிறை
**மாணவர்களுக்கும்...**

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் ....

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக...

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு ....

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு ....

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் ....

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...



6th Std Tamil CBSE FM.indd 7 17-12-2021 15:24:24

# பொருளடக்கம்


| வ. எண் | பொருண்மை/இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | **மொழி** | இன்பத்தமிழ் * | 2 |
| | | தமிழ்க்கும்மி | 5 |
| | தமிழ்த்தேன் | வளர்தமிழ் | 8 |
| | | கனவு பலித்தது | 15 |
| | | தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும் | 18 |
| 2 | **இயற்கை** | சிலப்பதிகாரம் * | 26 |
| | | காணி நிலம் * | 29 |
| | இயற்கை இன்பம் | சிறகின் ஓசை | 32 |
| | | கிழவனும் கடலும் | 37 |
| | | முதலெழுத்தும் சார்பெழுத்தும் | 43 |
| | | திருக்குறள் * | 48 |
| 3 | **அறிவியல், தொழில்நுட்பம்** | அறிவியல் ஆத்திசூடி | 52 |
| | | அறிவியலால் ஆள்வோம் | 55 |
| | எந்திர உலகம் | கணியனின் நண்பன் | 58 |
| | | ஒளி பிறந்தது | 64 |
| | | மொழிமுதல், இறுதி எழுத்துகள் | 69 |
| 4 | கல்வி | மூதுரை * | 78 |
| | | துன்பம் வெல்லும் கல்வி | 80 |
| | கண்ணெனத் தகும் | கல்விக்கண் திறந்தவர் | 83 |
| | | நூலகம் நோக்கி... | 87 |
| | | இன எழுத்துகள் | 91 |
| 5 | நாகரிகம், பண்பாடு | ஆசாரக்கோவை | 100 |
| | | கண்மணியே கண்ணுறங்கு | 102 |
| | பாடறிந்து ஒழுகுதல் | தமிழர் பெருவிழா | 105 |
| | | மனம் கவரும் மாமல்லபுரம் | 109 |
| | | மயங்கொலிகள் | 114 |
| | | திருக்குறள் * | 120 |




6th Std Tamil CBSE FM.indd 8 17-12-2021 15:24:24

| வ. எண் | பொருண்மை/இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
| --- | --- | --- | --- |
| 6 | தொழில், வணிகம் | நானிலம் படைத்தவன் | 126 |
| | | கடலோடு விளையாடு * | 129 |
| | கூடித் தொழில் செய் | வளரும் வணிகம் | 132 |
| | | உழைப்பே மூலதனம் | 137 |
| | | சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் | 140 |
| 7 | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | பாரதம் அன்றைய நாற்றங்கால் * | 148 |
| | | தமிழ்நாட்டில் காந்தி | 151 |
| | புதுமைகள் செய்யும் தேசமிது | வேலுநாச்சியார் | 155 |
| | | நால்வகைச் சொற்கள் | 159 |
| 8 | அறம், தத்துவம், சிந்தனை | பராபரக் கண்ணி * | 166 |
| | | நீங்கள் நல்லவர் | 168 |
| | எல்லாரும் இன்புற | பசிப்பிணி போக்கிய பாவை | 170 |
| | | பாதம் | 174 |
| | | பெயர்ச்சொல் | 178 |
| | | திருக்குறள் * | 184 |
| 9 | மனிதம், ஆளுமை | ஆசிய ஜோதி | 188 |
| | | மனிதநேயம் | 192 |
| | இன்னுயிர் காப்போம் | முடிவில் ஒரு தொடக்கம் | 196 |
| | | அணி இலக்கணம் | 199 |
| | | திருக்குறள் | 205 |


*( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

481U7

*மின் நூல்*

N53SU

*மதிப்பீடு*



6th Std Tamil CBSE FM.indd 9 17-12-2021 15:24:24

# ஆறாம் வகுப்பு

## தமிழ்



6th Std Tamil CBSE FM.indd 10 17-12-2021 15:24:24